# அண்ணா சிவில் சர்வீசஸ் பயிற்சி மையம்
# பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 046

## ஐ.ஏ.எஸ் / ஐ.பி.எஸ் - 2011 முதல்நிலைத் தேர்வுக்கான சிவில் சர்வீசஸ் ஆப்டிடியூட் டெஸ்ட் (2011) இலவசப் பயிற்சி

பாரதியார் பல்கலைக்கழகத்தில் அண்ணா சிவில் சர்வீசஸ் பயிற்சி மையம் தமிழக அரசு நிதி உதவியுடன் 2010 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையத்தால் மத்திய தேர்வாணையக் குழுவின் (UPSC) சிவில் சர்வீசஸ் முதல்நிலைத் தேர்வுக்கான முழுநேர இலவசப் பயிற்சி அக்டோபர் 2010 முதல் மே 2011 வரை நடைபெற உள்ளது. பயிற்சியில் சேர தகுதியுடையவர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் மற்றும் விபரங்களுக்கு பாரதியார் பல்கலைக்கழகத்தின் www.b-u-ac.in என்ற இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை **"ஒருங்கிணைப்பாளர் அண்ணா சிவில் சர்வீசஸ் பயிற்சி மையம், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 46"** (தொலைபேசி எண் 0422 - 2428238) என்ற முகவரிக்கு 20.09.2010 ஆம் தேதிக்குள் வந்து சேர வேண்டும். நுழைவுத் தேர்வு 25.09.2010 காலை 10.00 மணிக்கு பாரதியார் பல்கலைக்கழக **டாக்டர் உஷா மேத்தா அரங்கு, பாரதியார் பல்கலைக்கழகத்தில்** நடைபெறும். சேர விரும்புவோர் கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஓர் பட்டப்படிப்பை முடித்திருக்க வேண்டும்.
- குறைந்த பட்சம் 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.
- அதிகபட்ச வயது, ஆதிதிராவிடர் / மலையின மக்கள் 35 வயதுக்கு மிகாமலும், இதர பிற்படுத்தப்பட்டோர் 33 வயதுக்கு மிகாமலும் பொதுப்பிரிவினர் 30 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.
- பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- பல்கலைக்கழகம் நடத்தும் நுழைவுத்தேர்வின் மூலம் அரசு இட ஒதுக்கீட்டு அடிப்படையில் அமையும்.
- நுழைவுத்தேர்வு சிவில் சர்வீசஸ் முதல்நிலைத் தேர்வின் பொது அறிவுத்தாளின் அடிப்படையில் அமையும்.
- நுழைவுத்தேர்வில் பெறும் மதிப்பெண் மாவட்டம், தூரம், இவற்றின் அடிப்படையில் தங்குமிடம், உணவு, உதவித் தொகை மாதம் ரூ.800/- தேர்வு பெற்றவருக்கு வழங்கப்படும்.

மேற்கண்ட தகவலை பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் சி. சுவாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.